நாள்: 25.11.2025
SC. 18/2018
பெயர் மாரிமுத்து
PW1

<u>குறுக்கு விசாரணை</u>

அ.சா.2 அன்பழகன் என்னுடன் பிறந்த சகோதரன் என்றால் சரிதான். வழக்கிற்கு முன்னர் சீத்தாலட்சுமிக்கும், எனக்கும் தவறான உறவு இருப்பது சம்பந்தமாக அவரது சகோதரரான ஆஜர் எதிரி கூறிவந்த நிலையில் அவர் மீது நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்தேன். அந்த புகார் சம்பந்தமாக காவல்நிலையத்தில் எழுதி வாங்கினார்களா என்றால் இல்லை. கண்டித்து அனுப்பினார்கள். நான் சொல்வது போல் புகார் கொடுத்திருந்தார் இந்த வழக்கு குற்ற பத்திரிக்கையில் முன் புகார் விசாரணை பற்றி போலீசார் குறிப்பிட்டு சொல்லியிருப்பார்கள் என்றும், நான் புகார் எதுவும் செய்யவில்லை என்பதால் தான் இவ்வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் புகார் கொடுத்திருந்தால் எனக்கு மனு ஏற்பு ரசீது கொடுத்து அதை நீதிமன்றத்தில் அரசு தரப்பில் தாக்கல் செய்திருப்பார்கள் என்றும், ஆனால் தாக்கல் செய்யாத நிலையில் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சீத்தாலெட்சுமியை தொடர்பு படுத்தி எதிரி சொல்லவில்லை என்றும், நானாக கற்பனையாக நடக்காத சம்பவத்திற்கு புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரியை பழிவாங்கும் எண்ணத்தில் மேலே சொன்ன சங்கதிகளை கூறி புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அனுமந்தன்பட்டியில் வாரம் மற்றும் தினசரி சந்தைகள் எதுவும் கிடையாது. சம்பவம் நடந்த இடத்தில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் 5 –6 நபர்கள் இருந்தார்கள். நான் சம்பவ இடத்திற்கு சைக்கிளில் தான் சென்றேன். சம்பவத்தின் போது சைக்கிள் சேதமடைந்து என்றால் சரிதான். நான் சைக்கிள் சம்பந்தமாக காவல்நிலையத்தில் கூறி அது சம்பந்தமாக விசாரணை நடத்தி சைக்கிளை பெற்றுக்கொண்டேனா என்றால் இல்லை. நான் மருத்துவமனைக்கு சென்ற பின்னர் சைக்கிள் சம்பவ இடத்தில் தான் கிடந்தது. எனக்கு காயம் ஏற்பட்டு அதிக இரத்தம் வந்ததா என்றால் வந்தது. சம்பவ இடத்தில் உறைந்து கிடந்தது. எதிரி என்னை கையையும், கழுத்தையும் பிடித்து நான் குடியிருக்கும் வீடு வரைக்கும் தரையில் இழுத்து சென்றார். சம்பவ இடத்திற்கும் என் வீட்டிற்கும் சுமார் 400 மீ தூரம் இருக்கும், 400 மீ தூரத்திற்கும் இரத்த கறை இருந்தது. என் வீட்டிற்கு வந்த பிறகு மயக்கம் அடைந்தேன். எனக்கு எவ்வளவு நேரம் கழித்து மயக்கம் தெளிந்தது என்றால் உத்தமபாளையம் அரசு மருத்துவமனையில் மாலை நேரம் மயக்கம் தெளிந்தது. நான் காயம் பட்டு

என் வீட்டில் இருந்து மருத்துவமனையில் நான் கண்விழித்து பார்த்த இடைப்பட்ட நேரத்தில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. என்னை யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்று அந்த சமயம் எனக்கு தெரியவில்லை.

நான் மருத்துவரிடம் என்னை யார் தாக்கினார் என்ற பெயருடன் சொன்னேன் அதை மருத்துவரும் குறித்துக்கொண்டார். காவல்நிலையத்திற்கு நான் நேரடியாக சென்று புகார் கொடுக்கவில்லை, போலீசார் மருத்துவமனைக்கு வந்து விட்டார்கள். போலீசார் அங்குவந்து நடந்த விவரம் குறித்து என்னிடம் பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். அப்போதும் அரை மயக்கத்தில் தான் இருந்தேன். நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது, யார் கையெழுத்து போட்டார்கள் என்பது எனக்கு அப்போது தெரியாது. வழக்கு சம்பந்தமாக என் தம்பி அன்பழகன் தனியாக புகார் கொடுக்கவில்லை. என்னிடம் வாங்கிய கையெழுத்து வாங்கிய பேப்பரில் தான் என் தம்பியிடமும் வாங்கினார்கள். அதற்கு பின்னர் நான் தனியாக எழுத்து பூர்வமான புகார் எதுவும் கொடுக்கவில்லை.

நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், எதிரிக்கும், எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. சம்பவஇடத்திலிருந்து 400 மீ என்னை எதிரி இழுத்து வந்திருந்தால் உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்டிருக்கும் என்றும், எனக்கு காயம் எதுவும் ஏற்படாத நிலையில் நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு சென்றோன், போலீசார் எப்போது மருத்துவமனைக்கு வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எனது தம்பியும், அசோக், மதன்குமார் ஆகியோர்கள் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் பின்னிட்டு போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி நபர்களை சாட்சியாக என் வழக்கிற்கு ஆதராகவாக சேர்த்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் தன்னிச்சையாக மருத்துவமனைக்கு சென்றதாக சொல்லியிருந்தால் தவறு. ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு சென்றேன்.

நான் ஆம்புலன்சில் மருத்துமனைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. என் சட்டை மற்றும் நான் அணிந்திருந்த பேண்ட் ஆகியவை கிழிந்து இரத்த கறையுடன் இருந்தது. இரத்த கறை படிந்த உடைகளை போலீசார் என்னிடம் பெற்றுக்கொண்டார்கள். அன்று எந்த கலரில் சட்டை, பேண்ட் அணிந்திருந்தேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னை தாக்கிய அரிவாளில் இரத்த கறை இருந்தது. அரிவாளை போலீசார் எங்கு வைத்து கைபற்றினார்கள் என்று எனக்கு தெரியாது. நான் காவல்நிலையத்தில் வைத்து

தான் அரிவாளை பார்த்தேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தான் பார்தேன். சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட அரிவாளை பற்றி எனக்கு முழுமையாக தெரியாது. போலீசார் அரிவாளை என்னிடம் நேரடியாகவும், புகைப்படமாகவும் காட்டி என்னை சாட்சியம் அளிக்க வைத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்தான அரிவாள், சம்பவத்திற்கு பயன்படுத்தப்படவில்லை என்றும், வழக்கு சொத்திற்கும், வழக்கிற்கும் எந்த சம்பந்தம் என்றால் சரியல்ல.

நான் புகார் கொடுத்ததற்கு அசல் முதல் தகவல் அறிக்கையில் ஒரு கையெழுத்து பெற்றுக்கொண்டு ஒரு நகல் கொடுத்தார்கள் என்றால் சரிதான். அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கையில் எனது கையொப்பம் இல்லை. என்னுடைய நீதிமன்றத்தில் சாட்சியத்தில் உள்ள கையொப்பத்திற்கும், அ.சா.ஆ.1 புகாரில் உள்ள கையொப்பத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றும், போலீசார் அ.சாஆ.1 புகாரில் என் கையொப்பத்தை போட்டுக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 புகாரில் எழுதப்பட்ட பேனா மை கலரிற்கும், என் கையொப்பத்தில் உள்ள பேனா மை கலரிற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். ஆனால் அதில் உள்ளது என் கையெழுத்து தான். நானும், போலீசாரும் சேர்ந்து அ.சா.ஆ1 புகாரை காவல்நிலையத்தில் உற்பத்தி செய்தோம் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் , வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், நான் சொன்ன நேரத்தில் புகார் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

நான் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்று தடுமாறி விழுந்துவிட்டதால் எனக்கு நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சைக்கிளில் தான் சென்றேன். நான் சம்பவ சமயத்தில் சைக்கிள் எதுவும் பயன்படுத்தவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு நான் சைக்கிளை பயன்படுத்திருந்தால் வழக்கு சொத்தாக நீதிமன்றத்தில் ஒப்படைத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஓம் M.சிவாஜி செல்லையா,
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.